ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத₃ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸத₃ா ஹ்ருதி₃ ॥

பெரியாழ்வார் அருளிச்செய்த

# ॥ நெறிந்தகருங்குழல் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ நெறிந்தகருங்குழல் ॥

## சீதைக்கு அனுமன் தெரிவித்த அடையாளம்

‡நெறிந்த கருங்குழல் மடவாய்!⋆ நின் அடியேன் விண்ணப்பம்⋆
செறிந்த மணி முடிச் சனகன்⋆ சிலை இறுத்து நினைக் கொணர்ந்தது
அறிந்து⋆ அரசு களைகட்ட⋆ அருந்தவத்தோன் இடை விலங்கச்⋆
செறிந்த சிலை கொடுதவத்தைச்⋆ சிதைத்ததும் ஓர் அடையாளம் (1)

அல்லியம்பூ மலர்க் கோதாய்!⋆
அடி பணிந்தேன் விண்ணப்பம்⋆
சொல்லுகேன் கேட்டருளாய்⋆
துணை மலர்க் கண் மடமானே!⋆
எல்லியம் போதினி திருத்தல்⋆
இருந்ததோர் இட வகையில்⋆
மல்லிகை மா மாலை கொண்டு⋆
அங்கார்த்ததும் ஓர் அடையாளம் (2)

கலக்கிய மா மனத்தனளாய்க்⋆ கைகேசி வரம் வேண்ட⋆
மலக்கிய மா மனத்தனனாய்⋆ மன்னவனு மறாதொழிய⋆
குலக் குமரா! காடுறையப் போ என்று⋆ விடை கொடுப்ப⋆
இலக் குமணன் தன்னொடும்⋆ அங்கேகியதோர் அடையாளம் (3)

வார் அணிந்த முலை மடவாய்!⋆ வைதேவீ! விண்ணப்பம்⋆
தேர் அணிந்த அயோத்தியர்கோன்⋆ பெருந்தேவீ! கேட்டருளாய்⋆
கூர் அணிந்த வேல் வலவன்⋆ குகனோடும் கங்கை தன்னில்⋆
சீர் அணிந்த தோழமை⋆ கொண்டதும் ஓர் அடையாளம் (4)

மான் அமரு மெனோக்கி!⋆ வைதேவீ! விண்ணப்பம்⋆
கான் அமரும் கல்லதர் போய்க்⋆ காடுறைந்த காலத்து⋆
தேன் அமரும் பொழிற் சாரல்⋆ சித்திர கூடத்திருப்ப⋆
பால் மொழியாய்! பரத நம்பி⋆ பணிந்ததும் ஓர் அடையாளம் (5)

சித்திரகூடத்திருப்பச்⋆ சிறு காக்கை முலை தீண்ட⋆
அத்திரமே கொண்டெறிய⋆ அனைத்துலகும் திரிந்தோடி⋆
வித்தகனே! இராமாவோ!⋆ நின் அபயம் என்றழைப்ப⋆
அத்திரமே அதன் கண்ணை⋆ அறுத்ததும் ஓர் அடையாளம் (6)

மின் ஒத்த நுண் இடையாய்!⋆ மெய் அடியேன் விண்ணப்பம்⋆
பொன் ஒத்த மான் ஒன்று⋆ புகுந்தினிது விளையாட⋆
நின் அன்பின் வழி நின்று⋆ சிலைபிடித்தெம்பிரான் ஏகப்⋆
பின்னே அங்கிலக்குமணன்⋆ பிரிந்ததும் ஓர் அடையாளம் (7)

மைத் தகு மா மலர்க் குழலாய்!⋆ வைதேவீ! விண்ணப்பம்⋆
ஒத்த புகழ் வானரக்கோன்⋆ உடன் இருந்து நினைத் தேட⋆
அத்தகு சீர் அயோத்தியர்கோன்⋆ அடையாளம் இவை மொழிந்தான்⋆
இத் தகையால் அடையாளம்⋆ ஈதவன் கை மோதிரமே (8)

‡திக்கு நிறை புகழாளன்⋆ தீ வேள்விச் சென்ற நாள்⋆
மிக்க பெரும் சபை நடுவே⋆ வில் இறுத்தான் மோதிரம் கண்டு⋆
ஒக்குமால் அடையாளம்⋆ அனுமான்! என்று⋆ உச்சிமேல்
வைத்துக் கொண்டுகந்தனளால்⋆ மலர்க் குழலாள் சீதையுமே (9)

‡வார் ஆரும் முலை மடவாள்⋆ வைதேவி தனைக் கண்டு⋆
சீர் ஆரும் திறல் அனுமன்⋆ தெரிந்துரைத்த அடையாளம்⋆
பார் ஆரும் புகழ்ப் புதுவைப்⋆ பட்டர்பிரான் பாடல் வல்லார்⋆
ஏர் ஆரும் வைகுந்தத்து⋆ இமையவரோடிருப்பாரே (10)

‖ பெரியாழ்வார் திருவடிகளே சரணம் ‖